

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (24.7.2024) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அருட்தந்தை ஜோ அருண் – துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் குத்தூஸ் மற்றும் ஆணையத்தின் புதிய உறுப்பினர்களையும், சிறுபான்மையினர் பொருளா தாரம் மேம்பாட்டு கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஹாமில்டன் வெல்சன், ஏ. சுவர்ணராஜ், நாகூர் ஏ.எச். நஜிமுதின், பிரவீன் குமார் தாட்டியா, ராஜேந்திர பிரசாத், எம். ரமீத் கபூர், ஜே.முகமது ரஃபி, எஸ்.வசந்த் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சி.விஜயராஜ் குமார், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆணையர் வி.சம்பத், சிறுபான்மையினர் நல மேலாண்மை இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம் ஆகியோர் உள்ளனர்.

### சென்னையில் இருந்து டெல்லி செல்ல விஸ்தாரா விமானத்தில்

# ரூ.33 ஆயிரத்திற்கான டிக்கெட் ரூ.93 ஆயிரத்திற்கு விற்பனை!

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஜூலை 26 - சென்னையில் இருந்து டெல்லிக்கு செல்ல விஸ்தாரா விமானத்தில் ரூ.33 ஆயிரத்திற்கான டிக்கெட் ரூ.93 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது என்று மக்களவையில் கழக எம்.பி. தயாநிதி மாறன் குற்றம்சாட்டினார்.**

மக்களவை கூட்டத் தொடர் தொடங்கி நடந்து வருகிறது. நேற்று காலையில் கூட்டம் தொடங்கியதும் கழக உறுப்பினர் தயாநிதிமாறன் பேசியதாவது: -



விஸ்தாரா விமானத்தில் ஆன்லைனில் டிக்கெட் முன்பதிவு செய்யும் சாப்ட்வேரை டி.சி.எஸ். நிறுவனம் இயக்கி வருகிறது. நான் அந்த விமானத்தில் சென்னையில் இருந்து டெல்லிக்கு செல்ல டிக்கெட் முன்பதிவு செய்தேன். அதில் டிக்கெட்டின் விலை ரூ.33 ஆயிரம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால், ரூ.93 ஆயிரம் வசூலிக்கப்பட்டது.

அதேபோல், டிக்கெட் முன்பதிவை ரத்து செய்யும்போதும் அதிகளவு முறைகேடு நடைபெறுகிறது.

இதுகுறித்து விமான போக்குவரத்துத் துறை உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்துபேசிய ஒன்றிய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் கூறுகையில்,

‘இதுகுறித்து முழுமையாக விசாரிக்கப்படும். இதில் ஏதாவது தவறு நடந்திருந்தால் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.

### கனிம வளங்களுக்கு

# வரிவிதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு!

## உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு!

புதுடெல்லி, ஜூலை 26 - கனிம வளங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு என்று உச்சநீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு வழங்கி உள்ளது.

கனிம வளங்கள் மீது மாநில அரசுகளுக்கு இருக்கும் உரிமைக்கு எதிராக ஒன்றிய அரசு மற்றும் சுரங்க நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது. 25 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 86 வழக்குகளில் அரசியல் சாசன அமர்வு தங்களது தீர்ப்பு விவரங்களை வெளியிட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில், 8 நீதிபதிகள் மாநில உரிமைக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கி உள்ளனர்.

கனிம வளங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு மட்டுமே உண்டு. மாநிலங்களில் உள்ள கனிம வளத்துக்காக ஒன்றிய அரசிடம் இருந்து பெறும் ராயல்டியை வரியாக கருத முடியாது. ராயல்டி என்பது வரி அல்ல; குத்தகைத் தொகை மட்டுமே. கனிம ஒப்பந்த உரிமையாளர்கள் வழங்கும் ராயல்டி தொகை, வரி வரம்பிற்குள் வராது என்று அரசியல் சாசன அமர்வு அளித்துள்ள தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராயல்டியை வரி வரம்பிற்குள் கொண்டு வந்த உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பு ரத்து செய்யப்படுவதாகவும், சுரங்க நடவடிக்கைகளில் செலுத்தப்படும் ராயல்டி என்பது வரி என்ற முந்தைய உச்சநீதிமன்ற தீர்ப்புகள் தவறானது என்றும் அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.

கனிம வளங்கள் உள்ள நிலத்தின் மீது வரி விதிக்கும் உரிமையும் மாநில அரசுகளுக்கே உள்ளது. ஒரு நிலத்தில் இருந்து கிடைக்கும் கனிம வளத்தின் அடிப்படையில் வரி விதிக்கும் உரிமையும் மாநில அரசுக்கே உள்ளது. நிலம் என்ற சொல் கனிம வளங்கள் புதைந்துள்ள அனைத்து வகை நிலங்களையும் குறிப்பிடும் என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளது.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் – வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி – தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, ஜூலை 26 - கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு.







ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை.

மாறாக, தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று,

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலு மாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில், மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து, நாளை (ஜூலை 27 - சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில், கோவை சிவானந்தா காலனி, டாடாபாத் மைதானத்தில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2, பூத்கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக, பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள், தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### அரசு என்பது அனைத்து மாநிலங்களுக்குமானதே தவிர தங்களுக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டுமான அரசல்ல!

# நிதிநிலை அறிக்கையா? தன் ஆட்சியை தக்க வைத்துக்கொள்வதற்கான திட்டமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 26 - ஒன்றிய அரசின் பட்ஜெட் என்பது - தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள ஆந்திரா, பீகார் மாநிலங்களைத் திருப்திபடுத்துவதற்கானதே தவிர, ஒட்டுமொத்த இந்திய மக்களுக்கானது அல்ல; தங்கள் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளவர்கள் அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள விபீடணர்களாக மாறி, மோடியின் ஆட்சியையும், பட்ஜெட்டையும் ஆதரிக்கிறார்கள் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

ஒரு நாட்டு அரசின் வரவு - செலவுத் திட்டமான ‘பட்ஜெட்’ என்பது, வெறும் வரவு - செலவுத் திட்டம் என்பதைத் தாண்டி, அரசின் மூலாதாரத் திட்டம் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்படுத்தவும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது!

**சொந்தக் காலில் நிற்க முடியாத மோடி அரசு!**

வெறும் சட்டம் - ஒழுங்கு பராமரிப்புதான் ஓர் அரசின் கடமை என்ற தொடக்க கால சிந்தனையைத் தாண்டி, மக்கள்நலம் பேணும் கடமையைச் செய்யும், அரசுகளுக்கு, குறிப்பாக ஜனநாயக முறை அரசுகளில் (Welfare State) நலத்திட்டங்கள்மூலம் செய்யும் மாறுதல் ஏற்பட்டது.

அதன் பிறகு பட்ஜெட் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்துதல், பண வீக்கத்தைத் தடுத்தல், வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் வரி விதிப்புகளை உருவாக்குதல், வேலை கிட்டாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல் போன்ற அரசின் கொள்கை அமலாக்கக் கருவியாக மாறியது!

ஆனால், பிரதமர் தலைமையில் தற்போது நடைபெறும் - சொந்தக்காலில் நிற்காமல், மைனாரிட்டி அரசுதான்! பி.ஜே.பி. - மற்ற இரண்டு கட்சிகள் தெலுங்குதேசம், பீகாரின் அய்க்கிய ஜனதா தளம் மற்றும் சில உதிரி கட்சிகளின்மூலம் கூட்டணி அரசு அமைத்து, பிரதமர் நாற்காலி சாய்ந்து விடாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. இந்த முட்டுகளைச் சரியாகப் பார்த்து வரும் கவலை முதல் கவலையாகவே பிரதமர் மோடிக்கு ஏற்றப்பட்டு - அவ்வரசு, ‘நித்திய கண்டம் பூரண ஆயுசு’ என்ற சொலவடைக்கொப்ப நடந்து வருகிறது!

பிரதமர் மோடியே முன்பு பல மாநிலத் தேர்தல்கள் நடைபெற்றபோது, தனி அந்தஸ்து அந்தந்த மாநிலங்களுக்கு அளிப்போம் என்று கூறி, ஓட்டு வேட்டையாடினார்!

இப்போது அவர்கள் அதை நினைவூட்டிக் கேட்கத் தொடங்கிய நிலையில், 2024 - 2025 ஆம் நிதியாண்டின் பட்ஜெட்டை, தனது நாற்காலியை ஆடாது நிலைக்க வைக்கும் நோக்கத்தில் கணிசமான நிதியை



இரண்டு மாநிலங்களுக்கே (ஆந்திரா, பீகாருக்கு) மட்டும் ஒதுக்கி, ஏற்கெனவே வாக்களித்த மற்ற மாநிலங்களுக்கோ பட்டை நாமம் போட்டுவிட்டார்!

தெலங்கானா தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய பொழுது பல சந்தர்ப்பங்களில் கூறியது என்ன?

ஒடிசா மாநிலத்தில் பிஜூ பட்நாயக் ஆட்சியைத் தோற்கடிக்க அதற்குத் தனி அந்தஸ்து தருவதாக நாக்கில் தேன் தடவியது வசதியாக மறந்துவிட்டதா என்ற கேள்விகள் கிளம்பியுள்ளன!

**வஞ்சிக்கப்பட்ட மாநிலங்கள்!**

தமிழ்நாடு, கேரளம், தெலங்கானா, கருநாடகா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில், அவை முழுமையாக வஞ்சிக்கப்பட்ட நிலை அப்பட்டமாகத் தெரிகிறது!

மாநிலங்கள் இணைந்ததால்தான் ஒன்றிய அரசு - இந்திய அரசு என்ற அரசமைப்புச் சட்டத்தின் முதல் கூறு (First Aritlce) என்பதைக் கூட மறந்து, தங்களுக்கு முட்டுக்கொடுக்கும் அரசுகளுக்கு அள்ளி அள்ளித் தருதல், எதிர்க்கட்சிகளை வெற்றி பெற வைத்த மாநிலங்களுக்குக் கிள்ளியும்கூடத் தராமல், ஏதோ பழைய சக்ரவர்த்தி ராஜா ஆட்சியில், சிற்றரசர்களைக் கப்பம் கட்ட வற்புறுத்துவதுபோல், ஒருதலைபட்சமாக ஓரவஞ்சனையுடன் நடந்துகொள்வது நியாயமா?

ஒன்றிய அரசிற்குரிய வரவு என்பது மாநில அரசுகள் வசூலித்துத் தரும் பங்களிப்பு காரணமாகவே தானே சேர்ந்த நிதி! ஜி.எஸ்.டி. ஒன்று போதாதா? நேர்முக வரி, மறைமுக வரி என்ற வகையிலும் ஒன்றிய அரசு வாங்கி, வட்டி கட்டி, கடனைத் திருப்பித் தருவது மாநில மக்களிடமிருந்தும், மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களிலிருந்தும்தானே!

அப்படி இருக்க மைனாரிட்டி ஆக்கப்பட்டு மக்களால் ஒதுக்கப்பட்ட ஒரு கட்சியின் அரசு இப்படிப்பட்ட வித்தைகளாலும், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள், தங்கள் கட்சிக்கு வாக்களிக்காத மாநில மக்களைப் பழி தீர்க்க, நிதி ஒதுக்கீடு செய்யாமல், பட்ஜெட்டை ஓரவஞ்சனையில் ஓவியமாக்கிட்டு, ஒய்யாரப் பேச்சுப் பேசுவது அரசியல் அடாவடித்தனம் அல்லாமல், வேறு என்ன?

ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டும்தான் ஆட்சியா?

தமிழ்நாட்டில், பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்து மூக்கறுபட்டு மூலையில் தள்ளப்பட்ட சில கட்சிகளும், அதன் அரைவேக்காட்டுத் தலைவர்களும் எங்களுக்கு 25 இடங்களில் வெற்றி பெற வைத்திருந்தால், நிதி கொட்டியிருக்கும் என்று பேசுவது அரசியல் அறியாமை மட்டுமல்ல; அரசமைப்புச் சட்டத்தின் புரியாமையும்கூட!

ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டும்தான் ஓர் அரசு, தேர்தலுக்குப் பின்னர், அதற்காகவே நாங்கள் மக்கள் தரும் வரிப் பணத்தை தன்னிச்சையாக, நாங்கள் வழங்குவதில் இன்னார் - இனியார் என்ற பாகுபாடு காட்டுவோம் என்பதை வெளிப்படையாகவே சொல்வது - கீழிறிக்க அரசியலாக மலிவான பேரக்களமாக ஆக்கிவிட்டது மகா மகா வெட்கக்கேடு அல்லவா?

**விபீடணர்களாகி விடுவதா?**

மக்கள் வரிப் பண விநியோகம் ஆளும் கட்சி தரும் பணமோ, நிதியோ அல்ல! மக்கள் பணம்! ஜனநாயகத்தில் ஆட்சி செலுத்துவோர் தனிக்காட்டு ராஜாவாக ஆள முடியாது!

சில குற்ற வழக்குகளில் சிக்கி தங்களை விடுவித்துக் கொள்ள தேசிய ஜனநாயக கூட்டணியினர் என்ற பிரதமர் மோடி தலைமையிலான கூட்டணி அரசில் நீடிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளதால், இவர்கள் தமிழ்நாட்டு நலனைக் காட்டிக் கொடுக்கும் விபீடண, சுக்கிரீவன் அடையாளங்களாகி வலம் வருகின்றனர்!

மக்கள் தரும் தோல்வி பற்றிக்கூட கவலைப்படாமல், இப்படி அரசியல் உளறல் ஊற்றுக்களாகி, தங்களது ஆணவ அறியாமைக்கு வெளிச்சம் போட்டுள்ளனர்.

மக்கள் விரோதிகள் நாங்கள் என்று பகிரங்கப்படுத்துகிறார்கள் - பரிதாபத்திற்குரிய இவர்கள்!

**மக்கள் மன்னிக்கமாட்டார்கள்!**

தமிழ்நாடு என்று முன்பு மூச்சுக்கு முந்நூறு முறை கூறியவர், தமிழ்நாட்டு வெள்ள நிவாரணத்திற்கு கிள்ளிக்கூடத் தராது, வட மாநிலங்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் கொடுப்பது நியாயமா? என்று கேட்கத் துணிவில்லாத துன்மார்க்க அரசியல் வியாதிகளை தேர்தலின்போது, மக்கள் அறவே துடைத்தெறிந்து விரட்டுவார்கள் என்பது உறுதி!

‘உன்னை விற்காதே‘ என்றார் புரட்சிக்கவிஞர்! தன்னைத் தேர்தலுக்கு விற்றுக் கொள்ளும் இவர்கள், இப்படி நடப்பதை தமிழ் மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்! நாளும் தேய்ந்து வந்த பிறகும், தெளிவு பிறக்கவில்லையே! காரணம், ‘மடியில் கனம், வழியில் பயம்‘ - பல சிக்கல்களிலிருந்து மீள இப்படி ஒத்து ஊத வேண்டுமா?

**முதலமைச்சர் புறக்கணிக்கும் காரணம்!**

பட்ஜெட்டில், தமிழ்நாடு - பெயர் வரவில்லை என்று எந்தப் பொருளில், எதற்காகக் கேட்கிறார்கள் என்பதுகூட புரியாமல், தங்களை மேதைகள்போல எண்ணும் அரசியல் சூன்யங்களுக்கு மக்கள் பல முறை பாடம் கற்பித்தும், புத்திக் கொள்முதல் செய்து கொள்ளாமல் உலா வருவது அவலமல்லவா!

நமது முதலமைச்சர் தமிழ்நாட்டின் எதிர்ப்பினை வெளிப்படுத்த ‘நிட்டி ஆயோக்‘ கூட்டத்தினைப் புறக்கணித்துப் பதிவு செய்துள்ளார்!

**மோடி ஆட்சி நீடிக்குமா - நிலைக்குமா?**

தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற பல மாநிலங்களின் (தெலங்கானா, கருநாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்கம்) முதலமைச்சர்களும் புறக்கணித்துள்ளனர். இங்கு எப்படிப்பட்ட பழி வாங்கும் ஓரவஞ்சனை அரசு - மக்கள் விரோத அரசாக நடக்கிறது என்பதை உலகிற்கு அறவழியில் பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள்.

எனவே, இந்த நிதிநிலை அறிக்கை மக்களைக் காப்பாற்ற வெளியிடப்பட்ட நியாயமான பட்ஜெட் அல்ல! மாறாக, தங்களை, தங்கள் நாற்காலிகளைக் காப்பாற்றிட போடப்பட்ட ஒரு ‘பெஃவிகால் ஒட்டுக்கான பட்ஜெட்’டே தவிர, வேறில்லை.

இப்படியே நடவடிக்கைகளை மோடி அரசு தொடர்ந்தால், அதன் ஆட்சி தொடர்வது நீடிக்குமா? நிலைக்குமா? என்பது மில்லியன் டாலர் கேள்வியாகும்!

இவ்வாறு அவர், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பா.ம.க. நிறுவனர்

# மருத்துவர் இராமதாஸ் பிறந்த நாள்!

## வலைதளங்களில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஜூலை 26 - மருத்துவர் இராமதாசு அவர்களின் பிறந்தநாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு: -

**பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் இராமதாசு ஐயா அவர்களின் பிறந்தநாளில், அவர் நீண்டகாலம் நல்ல உடல்நலத்துடன் வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### 2 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில்

# கிருஷ்ணகிரியில் மிகப்பெரிய லோஹூம் பேட்டரி மறுசுழற்சி தொழிற்சாலை!

## ஆயிரம் பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள்!

கிருஷ்ணகிரி, ஜூலை 26 - இந்தியாவிலேயே மிகப் பெரிய பேட்டரி மறுசுழற்சி தொழிற்சாலை இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரியில் அமைய உள்ளது.

கிரேட்டர் நொய்டாவை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பிரபல பேட்டரி நிறுவனமான லோஹூம் (LOHUM) நிறுவனம், குஜராத், ஐக்கிய அரபு அமீரகம் போன்ற இடங்களில் ஆலைகள் அமைத்து பேட்டரிகளுக்கான மூலப் பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது.

இந்த நிறுவனம், தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் சுமார் 65 ஏக்கரில் பேட்டரி மறுசுழற்சி ஆலையை அமைக்கிறது.

6 ஆண்டுகளில் 2000 கோடி ரூபாய் முதலீடு செய்து பேட்டரி மூலப் பொருட்களை தயாரிக்க உள்ளது. புதிய ஆலைக்கான கட்டுமான பணிகள் அடுத்த 2 மாதங்களில் தொடங்க உள்ள நிலையில், அடுத்த 18 மாதங்களில் உற்பத்தி தொடங்கிவிடும் என்று லோஹூம் நிறுவனம் கூறியுள்ளது.

இதன்மூலம் ஆயிரம் பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். தமிழ்நாட்டில் தொழில் செய்ய மாநில அரசு உறுதுணையாக இருப்பதால், இங்கு ஆலையை தொடங்க ஆர்வம் காட்டுவதாக அந்நிறுவனம் பெருமிதம் தெரிவித்துள்ளது.